மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 02 | குரல்: 124 | வள்ளுவர் ஆண்டு 2054 | வெள்ளிக்கிழமை 05.01.2024 | பக்கங்கள் 09

# யாழில் ஜனாதிபதி ரணிலின் வருகைக்கு எதிராகப் போராட்டம்!

## காவல்துறையினரால் மூவர் கைது!



பக்கம் 6

## புலம்பெயர் நாடுகளில் தொடரும் அரசியல் போராட்டம்!



பக்கம் 8

## வடக்கில் இடம் பெயர்ந்தவர்கள் விவகாரம்! அதிகாரிகளுக்கு ரணிலின் அதிரடி உத்தரவு!



பக்கம் 9

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில்

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து சேகரிப்பு!



பக்கம் 3

## காணாமல்போனோர் விவகாரம்! விசாரணைகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு!!




பக்கம் 7

தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை!

# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்

பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொண்டுள்ள அரசாங்கம் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டில் பொருளாதார நெருக்கடி படிப்படியாகக் குறையும் என்று தெரிவித்திருக்கிறது.

2024 புதுவருடத்தின் முதலாவது நாளிலிருந்து அமுலுக்கு வந்திருக்கும் புதிய வரி நடைமுறைகள் மக்களை கலங்க வைத்திருக்குக்கிறது என்றே சொல்லலாம். ஆனால், கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் மக்கள் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

2023 மூன்றாம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வேகம் நேர்மறையாகியது. 2022 இல் மறை பெறுமானத்துக்கு வீழ்ச்சியடைந்த பொருளாதார வளர்ச்சி 2023இல் சராசரியாக 3 வீதத்தால் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. அத்தோடு சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டு கிடைத்த 337 மில்லியன் டொலர், ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய 220 மில்லியன் டொலர், உலக வங்கியிடமிருந்து கிடைத்த 250 மில்லியன் டொலர் என 4 பில்லியன் டொலருக்கும் அதிக அந்நிய செலாவணி இருப்பு பேணும் இலக்கை அண்மித்து விட்டோம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அரசாங்கத்தினதும் அரச தரப்பினரதும் கூற்றுகள் கருத்துக்கள் நம்பிக்கையூட்டுவதாக இருந்தாலும் மக்களை நெருக்கடிக்குள்ளேயே வைத்துக்கொண்டு அவர்களது நோக்கத்தை நிறைவேற்ற முனைவதே பாதகமான முடிவைத்தரலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு 70 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் 5 வீதத்தை விட குறைந்துள்ளது. இது புதிய வரித்திருத்தத்தால் சாத்தியமாகும். அரசின் 2023இல் எதிர்பார்ப்பு வருமானம் 2857 பில்லியனாக இருந்தபோதும் 3110 பில்லியன் கிடைத்தது. 2024இல் தேசிய உற்பத்தி வருமானம் 11.2 சதவீதமாக அதிகரிக்கும் 2026இல் தேசிய வருமானம் 15 சதவீதம் வரை உயரும் என்பவையெல்லாம் அரசின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாக இருக்கிறது.

கடந்த வருடங்களில் வரியிறுப்பாளர்களது வீழ்ச்சிகாரணமாக அரசுக்கு பாரதூரமான வருமான இழப்பு காணப்பட்டிருந்தது. ஆனால் புதிதாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள வரி அடையாள இலக்க நடைமுறையானது மக்களுக்கு நெருக்கடியானதாக இருந்தாலும் திட்டமிடப்பட்ட வகையில் அரசுக்கு வருமானத்தினை அதிகரிக்கும். இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை 1.8 - 2 வீதம் வரை அதிகரிக்க முடியும் என்றெல்லாம் அரசு நம்பிக்கை கொண்டிருக்கிறது.

இருந்தாலும் பாதிக்கப்படும், நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மக்களுக்கு நிவாரணங்களையும் நெருக்கடித் தணிப்புக்கான வழிகளையும் எவ்வாறு முன்வைத்திருக்கிறது என்பதே கேள்வியாக இருக்கிறது.

பெறுமதிசேர் வரியை அதிகரித்துவிட்டு மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை குறைப்பதற்கு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கவுள்ளோம் என்று கூறுவதில் எந்தளவுக்கு சமப்படுத்தல் உள்ளது என்பதே கேள்வி.

கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. அவை முழுமையாக சீர் செய்யப் படவில்லை. ஆனால், கடந்த வருடத்தினைப் போன்று இவ்வாண்டும் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. இதில் எவ்வாறான குழப்பங்கள் ஏற்படும் என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

நலன்புரித்திட்டங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து சரியான நிதி முகாமைத்துவத்துடனான வேலைத்திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் மக்களிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதும் முக்கியமானது. அது எவ்வாறு நடைபெறும் என்பதுதான்.

அதனால்தான், விமர்சனங்களுக்கப்பால், மக்களை தன்னம்பிக்கையால் நிரம்பி வழியச்செய்வது கட்டாயமாகிறது.

# மாற்றுத்திறணாளிகளுக்கு கால்களை வழங்கி வைத்தார் அமைச்சர் பந்துல!





போரினால் அவயங்களை இழந்த கால்களை இழந்தவர்களுக்கு ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைவாக நல்லெண்ண அடிப்படையில் அமைச்சர் பந்துல குணவர்ததன கால்களை வழங்கி வைத்தார். மாவட்ட செயலர்களின ஊடாக கால்களை இழந்த 101 மாற்றுத்திறணாளிகளின் பெயர்கள் முன் மொழியப்பட்டது .இதன்பொழுது அமைச்சர் பந்துல குணவர்த்தன, வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ் ,மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உட்பட்ட பலர் கலந்துகொண்டனர்.





# வெள்ளப்பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு!









லண்டன், ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினரின் நான்கு இலட்சம் (400,000) ரூபா நிதிப்பங்களிப்பில், வெள்ளப்பேரிடரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் மத்தி, சுபாஸ் குடியிருப்பு, ஐந்து வீட்டுத்திட்டம், அணைக்கட்டு வீதி, ஐயனார் குடியிருப்பு, மணியங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா (2000) பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து சேகரிப்பு!



சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து பெறும் நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். நல்லை ஆதீனத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.குறித்த நிகழ்வில் சமய தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.மேலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்துப் பிரதிகளை வடக்கிற்கு வருகை தந்துள்ள ஜனாதிபதிக்கு நேரில் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நிவாரணங்கள் கிடைக்கப்பெறும்! ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவாதம்!



நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுளனர் என தான் அறிவதாகவும், இம் முறை தைப்பொங்கல் கொண்டாட்டத்தின் பின்னர் அரச ஊழியர்களுக்கு ஓரளவான பொருளாதார நிவாரணங்கள் கிடைக்கப்பெறும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திய பின்னர் மக்களுக்கு பொருளாதார நிவாரணங் களை பெற்றுக்கொடுப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்த்திருத்தின் காரணமாக நிலுவையிலிருந்து அனைத்து பத்திரங்களும் செலுத்தி முடிக்கப்பட்டுள் ளன என்றும், அடுத்த நான்கு காலாண்டுகளில் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு அவசிய மான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோல், இவ்வருட இறுதிக்குள் பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3% ஆக மேம்படுத்தவும், 2025 ஆம் ஆண்டில் 5% ஆக அதிகரித்துக் கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித் தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று (04) நடைபெற்ற யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங் களின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியமர்த்தும் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட வேண்டும் என வட. மாகாண அரசாங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தினார்.

2025 ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்தவர்கள் என எவரும் இலங்கைக்குள் இருக்க கூடாதென வும், அவர்களுக்கு அவசியமான வசதிகளை பெற்றுக்கொடுத்து அவர்களின் உயிர்வாழும் உரிமையை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 1788 பேர் காணாமல் போயிருப்பதாக பதிவு செய்யப்பட்டிருப் பதோடு அவற்றில் 1289 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 500 க்கு கிட்டிய முறைப்பாடுகளை விரை வில் விசாரணை செய்யுமாறு அதிகாரிக்களுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி அடுத்த ஆறு மாதங் களுக்குள் அந்த பணிகளை நிறைவு செய்து காணா மல் போனோர் அலுவலகத்துடன் தொடர்புபட்டு செயற்படுமாறும் அறிவுறுத்தினார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அரசியல் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள் ஒன்றுகூடியிருந்த மேற்படி கூட்டத்தில் மாவட்டத்திற் குள் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் திட்டங்கள் மற்றும் அது தொடர்பில் எழுந்திருக்கும் பிரச்சினை கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மீள் குடியமர்த்தல், கல்வி, சுகாதாரம், காணி, மீன்பிடி, விவசாயம் மற்றும் வனப் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பிலும் வழக்கின் அபிவி ருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது விசேட கவனம் செலுத்தினார்.

வட மாகாண அபிவிருத்திக்கு அவசியமான திட்டமி டலை தயாரித்து துரித அபிவிருத்திக்கான பயணத் தில் இணைந்துகொள்ளுமாறு வடக்கு மாகாணத் தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி நாட்டின் பொருளதா ரத்தை மீட்கும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

புதிய பொருளாதார ஆணைக்கு ஸ்தாபிக்கப்பட்ட



தொடர்ச்சி 06 பக்கம்

# பொருளாதார நிவாரணங்கள் கிடைக்கப்பெறும்! ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவாதம்!



முதலீடுகளை மேற்கொள்ள முடியும் என்றும், வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளவர்களுக்கு அதற்கான அழைப்பை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கின் வலுசக்தியை பாதுகாத்து வலுசக்தி ஏற்றுமதி செய்வதற்கு அவசியமான அனைத்து திட்டமிடல்களும் காணப்படுவதாகவும் பூநகரியை வலுசக்தி கேந்திர நிலையமாக மாற்றுவதாகவும் உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, வடக்கின் விவசாயத்துறையை விவசாய நவீனமயப்படுத்தலுக்குள் உள்வாங்கி அதிலிருந்து பெறப்படும் பலன்களை இரட்டிப்பாக்கிகொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் காணி விடுப்பு செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி பலாலி விமான நிலையம் மற்றும் பாதுகாப்பு துறைக்கு தேவையான காணிகள் தொடர்பில் பெப்ரவரி மாதமளவில் இறுதி தீர்மானத்தை எடுப்பதாகவும் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு சென்று காணி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

வடக்கின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கான இரு திட்டங்களுக்கு இம்முறை வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் திட்டங்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த கொடுப்பனவுகளை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, மீன்பிடித்துறை அமைச்சர் டக்லஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் எம்.இளங்கோவன், ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன்ரத்னப்பிரிய, ஜனாதிபதியின் சமூக அலுவல்கள் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் இதன் போது கலந்துகொண்டிருந்தனர்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ் வருகை! பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது.





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தை நேற்று மாலை 4 மணியளவில் வந்தடைந்தார். யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் பாடசாலை அருகே உலங்கு வானூர்தி மூலம் வந்த ஜனாதிபதி வாகன தொடரணியாக மாவட்ட செயலகத்தை வந்தடைந்தார். வடக்கு மாகாணத்திற்கு நான்கு நாள் பயணமாக வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தொடர் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார். ஜனாதிபதியின் பங்கேற்புடன் யாழ் மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஆரம்பமானது. யாழ்ப்பாணம் பழைய பூங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக போராட்டம் நடைபெற்று வருகிறது.பழைய பூங்கா அருகில் பொலிஸார் வீதித் தடைகளை அமைத்து போராட்டகாரர்களை தடுத்து வைத்துள்ளனர். இதேவேளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அருகில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பேருந்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது.

# டெங்கு நோயாளர்கள் எவரும் அடையாளப்படுத்தப்படவில்லை!





நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிகாட்டலின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகத்தினரால் பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் சிரமதானப் பணிகளினால் 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின்னர் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்கள் எவரும் அடையாளப்படுத்தப்படவில்லை என்று நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் டொனால்ட் சுகந்தராஜ் ஜெபரெட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் தெல்லிப்பளைப் பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக கலைப் பீட மாணவி ஒருவர் டெங்கு தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்திருந்தார். இந்நிலையில் பல்கலைக்கழகத்தின் சகல விடுதிகளிலும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், வடக்கு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ,கேதீஸ்வரன் மற்றும் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் பல்கலைக்கழக சமூகத்தினரால் அதன் சுற்று வட்டாரங்களிலுள்ள வீடுகள் மற்றும் பொது இடங்களில் மாபெரும் சிரமதானப் பணிகள் கடந்த செவ்வாயன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சிரமதானப் பணிகளில் பல்கலைக்கழத்தின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்களால் நுளம்பு பெருகுவதற்கான பல இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டன. இதன் போது சிரமதானப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்குத் தேவையான உதவிகளையும், சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் பணிகளுக்கான ஆதரவையும் நல்லூர் பிரதேச சபையும், நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் வழங்கின. நாளை, 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பல்கலைக் கழகத்தின் விடுதிகள் மற்றும் பிரதான வளாகத்தினுள் அமந்துள்ள பீடங்களில் விசேட புகையூட்டல் பணிகள்
முன்னெடுக்கப்படவுள்ளன என்று நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் டொனால்ட் சுகந்தராஜ் ஜெபரெட்ணம் மேலும் தெரிவித்தார்.

# யாழில் ஜனாதிபதி ரணிலின் வருகைக்கு எதிராகப் போராட்டம்!






யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக போராட்டம் ஒன்று நேற்று இடம் பெற்றது. பழைய பூங்கா அருகில் பொலிஸார் வீதித் தடைகளை அமைத்து போராட்டகாரர்களை தடுத்து வைத்திருந்தனர். இதேவேளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அருகில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பேருந்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்துக்கு வெளியே நீர்த்தாரை பிரயோகிக்கும் இயந்திரம், கலகமடக்கும் படை, பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். நேற்று (04)உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வருகைதரும் ஜனாதிபதி மாலை 3 மணி முதல் 5.30 வரை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றினார்.







# பளுதூக்கல் சதனை வீரர் புசாந்தனுக்கு சிறீதரன் எம்.பி வாழ்த்து!



சர்வதேச மற்றும் தேசிய ரீதியான பளுதூக்கல் போட்டிகளில் அபாரசாதனைகளை நிலைநாட்டியுள்ள, யாழ்ப்பாணம், தென்மராட்சியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தனை, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று வாழ்த்தி மதிப்பளித்துள்ளார். அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற ஆசிய கிளாசிக் பவர்லிஃப்டிங் சம்பியன்ஷிப் பளுதூக்கல் போட்டியில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்ற புசாந்தன், அண்மையில் பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற தேசியரீதியிலான பளுதூக்கல் போட்டியில் கலந்துகொண்டு, மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளிலும் பங்கேற்று மூன்று தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். 120 கிலோவிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட இவர், squat பிரிவில் 330 கிலோகிராமையும் , benchpress பிரிவில் 175 கிலோகிராமையும், deadlift பிரிவில் 261 கிலோ கிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளதோடு, குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார். இந்நிலையிலேயே, யாழ்ப்பாண மண்ணின் சாதனைமகனான புசாந்தனை, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேரில் சென்று வாழ்த்தி மதிப்பளித்துள்ளார்.





# யாழில் காணாமல்போனோர் விவகாரம்!

## விசாரணைகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு!!



யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 1788 பேர் காணாமல் போயிருப்பதாக பதிவு செய்யப்பட்டிருப்பதோடு அவற்றில் 1289 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிபர் ரணில் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இன்றையதினம் உரையாற்றிய போதே அதிபர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது மேலும் தெரிவித்த அவர், யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 1788 பேர் காணாமல் போயுள்ளதாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு காணாமற்போனவர்கள் குறித்து 1289 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே எஞ்சிய 500 க்கு கிட்டிய முறைப்பாடுகளை விரைவில் விசாரணை செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய அதிபர் அடுத்த ஆறு மாதங்களுக்குள் அந்த பணிகளை நிறைவு செய்து காணாமல் போனோர் அலுவலகத்துடன் தொடர்புபட்டு செயற்படுமாறும் தெரிவித்தார்.

# புலம்பெயர் நாடுகளில் தொடரும் அரசியல் போராட்டம்! மாதிரி பொது வாக்கெடுப்பு!





2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காளிலே எம் ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர். தமிழீழம் நோக்கிய போராட்டம் அரசியல் மயமாக்கப்பட்டு உலகம் பூராகவும் வாழும் புலம்பெயர் தமிழ் மக்களால் அதற்கான பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு அங்கமாக தமிழரின் தலை விதியினை தமிழரே தீர்மானிக்கின்ற பொது வாக்கெடுப்பினை "Yes to Referendum" நடாத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையினையும் உலக நாடுகளையும் வலியுத்தி வரும் இந்த நேரத்தில் பொது வாக்கெடுப்பு தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு பிரித்தானியா வில் பல ஆலயங்களில் மாதிரி வாக்கெடுப்பு மற்றும் பரப்புரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொது வாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கத்தினால் இம் மாதிரி வாக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.இம் மாதிரி வாக்கெடுப்பில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு தங்கள் வாக்குகளை செலுத்தியிருந்தார்கள்.

நேற்றைய தினம் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில் வாக்காளித்த மொத்த வாக்குகளில்

96% மக்கள் தமிழீழத்தை ஆதரிப்பதாக்கவும்

2% மக்கள் 13ம் திருத்த சட்டத்திற்கு ஆதரவாக்கவும் 1% மக்கள் சமஸ்டிக்கு ஆதரவாகவும்

1% வேறு தெரிவுக்குமாக தங்கள் வாக்குகளை செலுத்தியிருந்தனர்.

தமிழரின் தலைவிதியை தமிழரே தீர்மானிக்கும் காலம் வரும்போது எம் இளம் தலைமுறையினர் அதில் தாங்களும் பங்கு கொள்ளவேண்டும் என்ற தூர நோக்குடனே இது போன்ற மாதிரி பொது வாக்கெடுப்புகள் "பொது வாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கத்தினரால்" உலகம் பூராக்கவும் நடாத்தப் பட்டு வருகின்றது.





# கில்மிஷாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்தித்து வாழ்த்தினார்.

வடக்கு மாகாணத்திற்கு நான்கு நாள் பயணமாக நேற்று வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தொடர் நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளார்.தனியார் விடுதியில் நடைபெற்ற நிகழ்வின்போது கில்மிஷாவையும் சந்தித்தார்.இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடனிருந்தார்.



# மாணவர்களுக்கு மகிழ்ச்சித் தகவல்! ரணில் முன்னெடுத்துள்ள நடவடிக்கை!



கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று உயர்கல்வியை தொடர்வதற்கு நிதி வசதி இல்லாத மாணவர்களுக்கு அதிபரின் பணிப்புரையின் பேரில் விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக அதிபர் நிதியத்தின் செயலாளர் சரத்குமார தெரிவித்துள்ளார்.
அதிபர் ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் அதிபர் நிதியத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் கீழ் மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.
இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
2022 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களில் உயர்கல்வியை தொடர முடியாமல் அதற்கான உதவிகள் தேவைப்படும் மாணவர்களுக்காக இந்த விசேட கொடுப்பனவு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
அதில், கல்விப் பிரிவுவொன்றுக்கு 30 பேர் என்ற அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 100 கல்விப் பிரிவுகளை சேர்ந்த மாணவர்களுக்கு 24 மாதங்களுக்கு 5000 கொடுப்பனவும் வழங்கப்பட்டது.
அதற்கமைய அனைத்து மாதங்களிலும் பணிகளை ஆரம்பிக்கும் முதல் இரு தினங்களுக்குள் மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் பணம் வைப்புச் செய்யப்பட்டு அவர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்பட்டது.
தற்போது இந்த மாணவர்களுக்காக 10 மாதாந்த தவணை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.
மேலும், இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்றிருந்தாலும் உயர்கல்வியை தொடர்வதில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் மாணவர்களுக்காக கல்விப் பிரிவொன்றுக்கு 50 பேர் என்ற அடிப்படையில் 100 கல்விப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 5000 மாணவர்களுக்கு 24 மாதங்களுக்கு 6,000 ரூபாய் கொடுப்பனவை மாதாந்தம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் அதிபரின் பணிப்புரைக்கமைய அதிபர் நிதியத்தினால் க.பொ.த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கல்வியை தொடர்வதற்கு நிதியுதவி வழங்கப்பட வேண்டியவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இதனிடையே, கடந்த இரண்டு ஆண்டுகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மாவட்ட அளவிலும், தேசிய அளவிலும் தெரிவு செய்யப்பட்டு, அந்த மாணவர்களுக்கும் நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என்றார். அதன்படி 90 மாணவர்களுக்கு 31.5 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.



# வடக்கில் இடம்பெயர்ந்தவர்கள் விவகாரம்! ரணிலின் அதிரடி உத்தரவு!



2025ஆம் ஆண்டுக்குள் இடம்பெயர்ந்தவர்கள் இருக்கக் கூடாது என அதிபர் ரணில் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அதிபர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது மேலும் தெரிவித்த அவர்,
வடக்கில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவதில் தற்போதுள்ள பிரச்சினைகளை தொடர முடியாது என அவர் தெரிவித்தார்.
எனினும், இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் பணிகள் 2025ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும், அதற்கான திட்டமொன்றை தயாரிக்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.